# பத்திரிக்கை செய்தி

## குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை
## மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், சிவகங்கை.

சிவகங்கை மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை கீழ் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் குழந்தை உதவி மையத்தின் ஆற்றுப்படுத்துநர்–1 பணியிடம் மற்றும் வழக்குப்பணியாளர்–1 பணியிடம் ஆகிய பணியிடங்களை ஒப்பந்த தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால் கீழ்க்காணும் பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பதவி | காலிப் பணியிடம் | வயது வரம்பு | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1. | ஆற்றுப்படுத்துநர் | 1 | 42 வயது அல்லது 42 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். (01.12.2025) அன்று)<br><br>அவசர உதவி சேவையில் முன்னதாகவே பணிபுரிந்தவராக இருந்தால் 52 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். | சமூகப்பணி (Social work) / சமூகவியல் (Sociology) குழந்தை வளர்ச்சி /உளவியல் /மனநலம் /பொது சுகாதாரம்/ இவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இளங்கலை பட்டம்.பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.<br><br>மேலும் கணினி அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.<br><br>அவசர உதவி மையங்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்.<br><br>**மாத தொகுப்பூதியம்–23,000/–** |
| 2. | வழக்குப்பணியாளர் | 1 | | அங்கீகரிக்கப்பட்டஅங்கீகரிக்கப்பட்ட / அதற்கு சமமான மையத்திலிருந்து 12–ம் வகுப்பு தேர்ச்சி, சிறப்பான தகவல் தொடர்பு திறன் பெற்றிருக்க வேண்டும்.பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.<br><br>அவசர உதவி மையங்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்.<br><br>**மாத தொகுப்பூதியம்–18,000/–** |

இதற்கான விண்ணப்பங்களை **https://sivaganga.nic.in** என்ற இணையதளத்தில் வேலைவாய்ப்புப் பிரிவில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம், அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம், பூர்த்திசெய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், அறை எண்.131, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை – 630562 என்ற முகவரிக்கு **12.01.2026** அன்று மாலை 5.45 மணிக்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க தெரிவிக்கப்படுகிறது.